# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 14.05.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் சூரா அல் அஃலாவின் முதல் 5 வசனங்களை ஓதினார்கள்:**

பொருள் : மிக்க மேன்மைக்குரிய உமது இறைவனுடைய பெயரின் தூய்மையினை எடுத்துரைப்பீராக.

அவனே (மனிதனைப்) படைத்து முழுமைப்படுத்தினான்.

மேலும் அவன் (அவனுடைய ஆற்றல்களைக்) கணித்து, (அவற்றிற்கேற்ப அவனுக்கு) நேர்வழி காட்டுகின்றான்.

அவன் மேய்ச்சல் புல்லை வெளிப்படுத்துகின்றான். (87 : 2-5)

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆவிலும் இரு ஈத் தொழுகையிலும் முதல் ரக்அத்தில் சூரா அஃலா அதிகாரத்தை ஓதி வந்தார்கள். இரண்டாவது ரக்அத்தில் சூரா காஷியா ஓதி வந்தார்கள். இந்த சுன்னத்தைப் பின்பற்றி இந்த சூராக்கள் ஓதப்படுகின்றன.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. வித்ரின் முதல் ரக்அத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரத்துல் அஃலாவை ஒதி வந்தார்கள். இரண்டாவது ரக்அத்தில் சூரா காஃபிரூன், மூன்றாவது ரக்அத்தில் சூரா இக்லாஸ், சில அறிவிப்புகளின்படி கடைசி மூன்று சூராக்களை ஓதினார்கள்.

இப்போது சூரத்துல் அஃலாவின் மேற்கண்ட வசனங்கள் குறித்து சில விஷயங்களைக் கூறுவேன்

இந்த சூராவுக்கு தஃப்ஸீர் கபீரில் மிகப்பெரும் விளக்கம் தந்துள்ளார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் விளக்கங்கள் பெரும் அறிவுக் கருவூலங்களாகும். அதனைப் படிப்பதில் ஜமாஅத் கவனம் செலுத்த வேண்டும். முழு குர்ஆனின் தப்ஸீரும் இல்லை எனினும் பல்வேறு சூராக்களின் தொகுப்புகள் 10 பாகங்களாக உள்ளன.

**ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா** - மிக்க மேன்மைக்குரிய உமது இறைவனுடைய பெயரின் தூய்மையினை எடுத்துரைப்பீராக.

அதாவது உங்கள் இறைவன் தனது படைத்து காத்தோம்பும் பண்பின் மூலம் உயரிய தகுதிகள் கொண்டுள்ளான். அவனை தஸ்பீஹ் செய். இதன் பொருள் என்னவென்றால் நீ உனது இறைவனின் பெயரை உலகில் உயர்த்துவாயாக. ஒரு முஃமினுக்கு இதில் இரண்டில் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் இறைவனது கடைசி ஷரீஅத் நபி ஆவார்கள். அவர்கள் மூலம் ஷரீஅத் முழுமை பெற்றது. அவரை நமக்காக அல்லாஹ் முழுமையான முன்மாதிரியாக்கினான். அவர்களது வழியில் நடப்பதை நம்மீது கடமையாக்கியுள்ளான்.

எனவே அவர்களுடன் உண்மையான முறையில் தம்மை இணைத்து கொண்டிருப்பவர் அல்லது இணைத்துக் கொள்ள விரும்புபவர் அவர்களது முன்மாதிரியின் படி நடக்க முயல வேண்டும்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

நிச்சயமாக உங்களுக்கு இந்த அல்லாஹ்வின் தூதரிடத்தில் அழகிய முன்மாதிரி உள்ளது. (33:22)

அல்லாஹ்வுடைய தஸ்பீஹை விளக்குவதில் அவர்களின் முன்மாதிரி என்ன? அவர்கள் காலையிலும் மாலையிலும் பகலும் இரவும் தஸ்பீஹில் கழித்தனர்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: உனக்கு நன்றி செலுத்துபவர்களுடன் என்னை சேர்ப்பாயாக.

ருகூ,ஸஜ்தாக்களில் அல்லாஹ் தஸ்பீஹ் மற்றும் தஹ்மீது (தூய்மை எடுத்துரைத்தல்,புகழ்தல்) செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களின் தஹ்மீது ஒரு தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது. ருகூவில் சுப்ஹான ரப்பியல் அழிம் (மகத்தான எனது இறைவன் தூயவன்) என்று அவனது மகத்துவம் மற்றும் பெருமை எடுத்துக் கூறினார்கள். பிறகு ருகூவில் இருந்து எழுந்து ஸமியல்லாஹு லிமன் ஹமிதா (தன்னை புகழ்பவரின் புகழ்ச்சியை அவன் கேட்கிறான்) என்று கூறி அளவில்லாத புகழ்ச்சியின் பக்கம் கவனமூட்டினார்கள். அவர்களின் ருகூவு, ஸஜ்தா, கியாம் (குனிதல், சிரம்பணிதல், நிற்றல்) ஆகிய தொழுகையின் ஒவ்வொரு அசைவை பற்றியும், அதன் அழகையும் நீளத்தைப் பற்றியும் கேட்காதீர்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

**ஸஜ்தாவின் நீளத்தைப் பற்றி ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஹஸ்ரத் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் கூறுகிறார்கள்.**

ஒரு முறை ஹஸ்ரத் நபி(ஸல்) மஸ்ஜிதுக்கு வந்தார்கள். கிப்லாவை நோக்கியவாறு ஸஜ்தாவில் வீழ்ந்துவிட்டார்கள். மிக நீண்ட ஸஜ்தா செய்தார்கள். எத்துணை நீளமாக ஸஜ்தா செய்தார்கள் எனில் அதனைப்பார்த்து நான் மிகவும் சங்கடத்துக்குள்ளாகினேன். எந்த அளவுக்கு எனில் அன்னாரின் உயிரை இறைவன் கைப்பற்றிவிட்டானோ என்று நான் நினைத்துவிட்டேன். நான் அவர்களின் அருகில் சென்றதும் ஸஜ்தாவில் இருந்து எழுந்து அமர்ந்தார்கள். யார்? என்றார்கள். அல்லாஹ்வின் தூதரே! நான் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப். அல்லாஹ்வின் தூதரே, உங்கள் ஸஜ்தா மிகவும் நீண்டதாக இருந்ததால் உங்கள் ரூஹ் கைப்பற்றப்பட்டுவிட்டதோ என்று அஞ்சினேன். என்று கூறினேன். அல்லாஹ்வின் தூதர் கூறினார்கள். என்னிடம் ஜிப்ராயீல் வந்தார்.. எவர் உம்மீது தரூது அனுப்புவாரோ அவர் மீது ரஹ்மத்தை இறக்குவேன். எவர் ஸலாமத்தை அனுப்புவாரோ அவர்மீது ஸலாமத்தை அனுப்புவேன்.. என்று அல்லாஹ் கூறுவதாக எனக்கு நற்செய்தி கூறினார்.. அதற்காக நன்றி செலுத்தும் பொருட்டு ஸஜ்தா செய்தேன். அல்லாஹ்வின் மிகப்பெரிய ஓர் அன்பளிப்பு இது என்பதால் அல்லாஹ்வுக்கு இவ்வாறு நன்றி தெரிவித்தார்கள் என்பதன்று. அல்லாஹ்வுக்கு ஒவ்வொரு சிறிய அன்பளிப்புக்கும் கூட நன்றி செலுத்தினார்கள். அளவற்ற தஸ்பீஹும், செய்தார்கள். அவர்களின் உணவு எப்படியிருந்தது? சில சமயம் பட்டினியாகவும் இருந்தனர். சில சமயம் காய்ந்த ரொட்டி மட்டும் கிடைத்தது. அதற்குகூட இறைவனுக்கு அளவற்ற நன்றி செலுத்தினார்கள்..

தஸ்பீஹினால் தனது நாவை நனைத்தனர்..மேலும் கூற விரும்புகிறேன்.. ரிவாயத்தில் வருகிறது. **ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா** என்ற வசனம் இறங்குவதற்கு முன் ஹஸ்ரத் நபி(ஸல்) தானும் செய்து ஸஹாபாக்களையும் செய்ய வைத்த துஆ இதுவாகும்.

அல்லாஹ்வே நான் உனக்கு ஸஜ்தா செய்கிறேன்.. பிறகு அல்லாஹ்வுடைய இல்ஹாமின் மூலம் **சுப்ஹான ரப்பியல் அஃலா** (உயர்வான என் இறைவன் தூயவன்) என்ற துஆவை கற்றுத் தந்தான்.

இவ்வாறு ருகூவில் செய்வதற்காக 56:75 என்ற வசனத்தை இறக்கி மகத்தான உனது இறைவன் தூயவன் என்ற துஆவை கற்றுத்தந்தார்கள்.

அல்லாஹ்வை எவ்வாறு தஸ்பீஹ் செய்வது? என்று எந்நேரமும் அவனது பெருமையைக் குறித்து கருதிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எவ்வாறு நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். இது குறித்து ஜுகரிய்யா அறிவிக்கிறார்கள்:

சுபுஹ் தொழுகை நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னை கடந்து சென்றார்கள். அப்போது நான் எனது முஸல்லாவில் உட்கார்ந்திருந்தேன்; தஸ்பீஹ் செய்து கொண்டிருந்தேன்.. சுபுஹ்விலிருந்து இதே இடத்தில் அமர்ந்து என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் தஸ்பீஹ் செய்து கொண்டிருக்கிறேன்; அல்லாஹ்வை ஸிக்ர் செய்து கொண்டிருக்கிறேன் என்று நான் (ஜுவைரிய்யா என்ற அந்த பெண் ஸஹாபி)

கூறினார்கள். அதற்கு பிறகு எப்போதும் நான் நான்கு சொற்களை மட்டும் திரும்ப திரும்ப சொல்கிறேன்.. அது நாள் முழுவதும் நீங்கள் செய்கிற அனைத்தையும் விடவும் பொருள் பொதிந்ததும் ஞானம் நிறைந்ததும் ஆகும். அது சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம்.

அல்லாஹ் அவனது எல்லா படைப்புகளைவிடவும் தூயவன். அல்லாஹ் அவனது சுய விருப்பத்தின் அளவு தூய்மையானவன் அல்லாஹ் அவனது அர்ஷின் அளவு தூய்மையானவன்.(அதாவது எல்லையற்ற தூய்மை)

அல்லாஹ் அவனது சரியான சொற்களின் அளவுக்கு தூய்மையானவன். ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் தூய்மையாற்றல், அவர்களின் துணைவிமார்களின் தஸ்பீஹ் செய்வதன்மீது, இறைவனின் ஸிக்ர் செய்வதில் உள்ள கவனம், அதற்காக முயற்சிகளை தெரிந்து கொள்ளலாம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) உடைய தஸ்பீஹை மதிப்பிடுங்கள். எவ்வளவு ஆழமாகவும், சிந்தித்தும் இந்த தஸ்பீஹை செய்துள்ளார்கள் என்று பாருங்கள். 1 மணிநேரம் 1 1/2 மணிநேரம் செய்ய வேண்டிய அனைத்து ஸிக்ர்களையும் மூன்றே வார்த்தைகளில் தந்துவிட்டார்கள். இது அவர்களின் தகுதியாகும். ஆனால் தஸ்பீஹை சற்று உயர்ந்த வார்த்தைகளில் செய்யுங்கள். கூடவே அல்லாஹ்வின் நிஃமத்துகளை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மகத்துவத்தை கண்முன் நிறுத்தி தஸ்பீஹ் செய்யுங்கள். பிறகு மக்கா வெற்றி நடந்தது. இந்த தஸ்பீஹ் மற்றும் நன்றிகாட்டுதலின் இன்னொரு கோணம் வெளிப்பட்டது. தலையை குனிந்து கொண்டு இருந்தார்கள்.. பிறகு இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வே, உனது புகழுடன் நீ தூயவன். அல்லாஹ்வே என்னை மன்னிப்பாயாக.

இந்த தகுதியை அடைந்த பிறகு, உம்மத்திலுள்ளவர்களைத் தான் நேசிக்க வேண்டும் எனில் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனையை வைத்தான். அன்னார் அல்லாஹ்வை தஸ்பீஹ், தஹ்மீது செய்ய வேண்டும் என்று கற்றுத் தருகிறார்கள். இத்துடன் அல்லாஹ்வின் பெருமை சரியான முறையில் எப்படி எடுத்து வைத்தார்கள் என்பதனையும் தெரிந்து கொள்கிறோம்.. உம்மத் அவர்களுக்காக தரூத் மற்றும் ஸலாமத்துகளை அனுப்பி தமது நன்றிஉடைமையை தெரிவித்தது. இதற்கும் ஈடு இணை இல்லை. இறைவன் என் மீது தரூது அனுப்புவதற்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் தந்துள்ளான் எனில் எனக்கு தரூத் ஓதுவது அவர்கள் மன்னிக்கப்பட போதுமானதாகி விடுகிறது. இதற்காக நான் அவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

இன்னொன்று அல்லாஹ்வுக்கு நான் தஸ்பீஹ் செய்வதற்கு இன்னொரு காரணம் எந்த அளவுக்கு அல்லாஹ் இந்த உம்மத்துக்கு மன்னிப்புக்காக ஏற்பாடு செய்துள்ளான். எனக்கு எந்த அளவுக்கு தகுதியை வழங்கியுள்ளான்? அதற்காக நான் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று அன்னார் கருதினார்கள்.

அல்லாஹ் மக்கா வெற்றியை தந்த போது அவர்கள் காட்டிய நன்றி வெளிப்பாடும் தஸ்பீஹும் மிக உயரிய முன்மாதிரிகளாகும். அதற்கு ஈடு இணை இல்லை.

இவ்வாறு தஸ்பீஹின் முன்மாதிரியை காட்டி உம்மத்திற்கு உங்கள் நிலைப்பு, வெற்றி, வளர்ச்சி எல்லாமே உயரிய இறைவனை தஸ்பீஹ், தஹ்மீது செய்வதினாலே கிடைக்குமேயன்றி, உலகியல் காரணிகளால் கிடைக்காது என்று கவனமூட்டினார்கள். அவனே ரப்புல் ஆலமீன். (எல்லா உலகங்களையும் படைத்து பரிபாலிப்பவன்)

நினைவில் கொள்ளுங்கள். தத்தமது வட்டத்தில் இன்னும் பல ரப்புகள் (நம்மை பராமரிப்பவர்கள்) இருக்கின்றார்கள். அவர்களுடன் நீங்கள் சம்பந்தப்பட்டுள்ளீர்கள். ஆரம்பத்தில் மனிதன் குழந்தையாக இருக்கும்போது தாய், தந்தை பராமரிக்கிறார்கள். இதனால் தாயும், தந்தையும் ரப் ஆக இருக்கிறார்கள். பிறகு அக்குழந்தை வளர்ந்து உலகியல் பணிகளில் மூழ்கும் போது அதிகாரிகள், மன்னர்கள், நாட்டின் அதிகாரிகள் நம்மை பராமரிக்கும் பணியில் பங்கெடுக்கின்றனர். இவர்கள் அனைவரின் பராமரிப்பும் குறைபாடுகள் உள்ளவை. முழுமையானவையல்ல. தாய் மிகவும் தூய்மையான முறையில் குழந்தையை

பராமரிக்கின்றனர். ஆனால் அது கூட முழுமையானதன்று. அதனால் அவனை பராமரிப்பதில் குறை ஏற்பட்டு விடுகிறது.

சிலவேளை குழந்தைக்கு அதிகமாக உணவு கொடுத்து நோயாளியாக்கி விடுகிறான். சில நேரங்களில் குழந்தையின் உணவில் கவனம் செலுத்தாமல் பலஹீனமாக்கிவிடுகிறான். அல்லது வேறுபக்கம் கவனம் செலுத்தி குழந்தையை கண்காணிக்காமல் விட்டுவிடுகிறான். ஏதாவது வகையில் குறை ஏற்பட்டு விடுகிறது.

இவ்வாறு உலகில் உள்ள அதிகாரிகள் மன்னர், அனைவருமே பலஹீனமானவர்கள்தான் நன்றாக புகழப்பட வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் புகழ்ப்பட வேண்டிய அளவுக்கு முழுகடமையும் அவர்களால் ஆற்ற முடிவதில்லை. அவர்களுள் பலர் பொய்யாக புகழப்படுகின்றனர். மனிதன் சில வேளை பொய்யாக புகழும்போது அவனது இயல்பில் நயவஞ்சம் உருவாகி விடுகிறது.

ஆனால் உயரிய இறைவனோ எல்லா பலஹீனங்களில் இருந்தும் தூய்மாயானவன். அவனை புகழ்வது உண்மையானது. அவன் ரஹ்மானிய்யத்தின் ஒளியின் மூலமும் பராமரிக்கிறான். ரஹீமிய்யத் என்ற ஒளியின் மூலமும் சில வேளைகளில் தனது அடியார்களுக்கு எண்ணற்ற அருள்களை வழங்குகிறான். துஆக்களை கேட்கிறான். அவன் முஜீப் (துஆக்களுக்கு பதிலளிப்பவன்) ஆவான்.

சுருக்கமாக அவனுக்கு எண்ணற்ற பண்புப் பெயர்கள் உள்ளன. அதற்கேற்ப அவன் தனது அடியார்களுடன் நடந்து கொள்கிறான். எனவே ஒரு முஃமின் ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா (உமது உயரிய இறைவனின் புகழை எடுத்துரைப்பீராக) வின் படி அமல் செய்தவாறு அந்த முழுமையான பண்புகளை உடைய உயரிய இறைவனை தஸ்பீஹ் செய்து வர வேண்டும்.

அவனது எல்லா நல்ல பண்புகளில் இருந்தும் பங்கு பெற முயலுங்கள். அவனது கோபத்திலிருந்தும் பிடியில் இருந்தும் தப்புவதற்கு முயலுங்கள். ஒவ்வொரு நல்லதுடன் கெட்டதும் உள்ளது. அல்லாஹ்விடம் எல்லா திசைகளில் இருந்தும் தப்புவதற்கு துஆ செய்ய வேண்டும். உண்மையான தஸ்பீஹ் செய்பவரை அல்லாஹ் தஆலா நிச்சயமாக தனது அடைக்கலத்தில் எடுத்துக் கொள்கிறான்.

திருக்குர்ஆனில் தஸ்பீஹ் பற்றி விளக்கப்பட்ட இடங்களில் தொழுகையில் தஸ்பீஹ் செய்வது குறித்தும் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் தொழுகையும் ஒருவகை தஸ்பீஹ் ஆகும். எனவே அதனை பேண வேண்டும். தொடர்ந்து செய்வது அவசியமாகும். அப்போதுதான் ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா –வைப்பற்றி புரிய முடியும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இதன் பொருள் தனது ரப்பின் பெயரை உலகில் உயர்த்துதல்.

இது சம்பந்தமாக ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் அனுபவத்தை பார்க்கிறோம். அவர்கள் இதிலும் உயரிய முன்மாதிரி காட்டியுள்ளார்கள். அன்னார் தஃவத்தே இலல்லாஹ்வின் கடமையை நிறைவு செய்துள்ளார்கள்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களிடம் அவர்களைப் பற்றி கூறும்போது அல்லாஹ்வின் கட்டளையின் படி அல்லாஹ்வை நோக்கி அழைப்பவராக உம்மை ஆக்கியுள்ளோம் (33.47) என்று கூறியுள்ளான்.

மேலும் இறைவன் அன்னாரைப் பார்த்து கூறுகிறான். தூதரே! உம்முடைய இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எட்ட வைப்பீராக. (5:68)

மேலான இறைவனின் பெயரை உயர்த்தும் உமது இலக்கு இன்று அதிகமாகி விட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மென்மையுடனும், ஹிக்மத்துடனும், கருணையுடனும், பொறுமையுடனும் தப்லீகின் கடமையை செய்து வந்தார்கள். ஒவ்வொரு நிலையிலும் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்தவாறு அக்கடமையை நிறைவேற்றினார்கள். பிரச்சனைகள் வந்த போதும் அவனது பெயரை தஸ்பீஹ் செய்தவாறு அவர்களின் பாதம் முன்னேறிக் கொண்டேதான் சென்றது. எந்த பயமும் அவர்களை அப்பணியிலிருந்து தடுக்க முடியவில்லை. இந்த ரூஹ் தான் அன்னாரின் தூய்மையாக்கும் ஆற்றலால் சஹாபாக்களின் மீதும்

நிறைந்திருந்தது. அல்லாஹ்வின் பெயரை உயர்த்துவதற்காக அவர்களும் குர்பானி (தியாகங்களை) செய்து வந்தனர்.

பிறகு இறைவன் கூறுகிறான்:

**அல்லஸீன கலக ஃபஸவ்வா** – அதாவது அவன் படைத்தான்; முழுமைப்படுத்தினான். (87:5)

இதன் பொருள் என்னவென்றால் மனிதனுக்குள் எல்லா விதமான, தேவையான ஆற்றல்கள் அடங்கிய நிலையில் படைக்கப்பட்டுள்ளான். வளர்ச்சியின் மூலப் பொருள் அவனிடத்தில் உள்ளது. பொதுவாக ஒரு சாதாரண குழந்தை பிறக்கும் போது அதனிடம் எல்லா விதமான அவசியமான ஆற்றல்களும் இருக்கின்றன. அது வளர வளர அதன் சூழ்நிலைக்கேற்ப அந்த ஆற்றல்களும் வளர்ந்து கொண்டே செல்கிறது. சிலர் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பலவீனமாக இருக்கின்றனர் என்பதும் உண்மைதான். ஆனால் அது பொதுவான நிலை அல்ல. மனிதனை அல்லாஹ் படைப்பினங்களுள் சிறந்ததாக ஆக்கியிருக்கின்ற போது அவனிடம் மனரீதியாக தகுதிகளையும் தந்துள்ளான். அதனை சரியான முறையில் பயன்படுத்தும்போது எல்லா படைப்பினங்களையும் மிகைத்துவிடுகிறான். அப்போதுதான் மனிதன் இறைபண்பை பெற்றவன் ஆக முடியும். இதன் முழுமையான முன்மாதிரி நான் முன்னரே கூறிவிட்டேன். நமது எஜமானரும் தலைவரும் ஆகிய முஹம்மத் (ஸல்) ஆவார்கள். அவர்கள் மீது அல்லாஹ் தனது முழுமையான போதனையை இறக்கினான். மனிதனிடம் இறைவன் உருவாக்கிய அந்த ஆற்றல்களின் முழுவடிவமாக அன்னார் தோன்றினார்கள் அல்லது அக்காலத்தில் தோன்றிய பரினாம வளர்ச்சிகள் அல்லது கியாமத் வரை தோன்ற இருந்த தகுதிகளின் பரிணாம வளர்ச்சிகள் அனைத்தும் அன்னாரிடம் நிரம்பியிருந்தது. மனித இயல்பில் மென்மையையும், கோபத்தையும் வைத்துள்ளான். அவற்றை தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும். சில வேளை மென்மை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. சில இடங்களில் கோபத்தை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட போதனையிலும் கூட மென்மையையும் கோபத்தை அதனதன் இடத்தில் வெளிப்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது. அப்போதுதான் நீங்கள் ஸவ்வா என்ற ( முழுமைப்படுத்தினான்) என்ற சொல்லின் கீழ் வரும் மனிதர்களாகி இருப்பீர்கள்.

ஒவ்வொரு அமலும் இடம் சூழ்நிலைக்கு ஏற்ப இருக்க வேண்டும். உதாரணமாக சீர்திருத்த வேண்டிய நேரத்தில், இவரை மன்னித்தால் சீர்திருத்தம் ஏற்படுமா? அல்லது தண்டித்தால் ஏற்படுமா என்று பார்க்க வேண்டும். எல்லா நிலையிலும் மன்னித்துக் கொண்டே சென்றால் சமுதாயத்தின் அமைதி அழிந்து போய்விடும். எனவே ஓர் அறிவுள்ளவன் அல்லாஹ்வின் மீது ஈர்ப்புள்ள மனிதன் நடுநிலையில் இருந்து பயன்பெறுகிறான். எனவே இறைவன் கூறுகிறான் எல்லா நிலைக்கும் இணக்கமான அனைத்து தகுதிகளும் வாய்ந்தவனாக உங்களை ஆக்கியுள்ளோம். குறைபாடுகளற்றவனாக ஆக்கியுள்ளோம்.

ஓர் அறிவுள்ள மனிதனின் ஒவ்வொரு செயலும் இடம் சூழ்நிலைக்கு ஏற்ப இருக்கின்றன.

படைத்து முழுமையாக்கினான் என்பதன் இன்னொரு பொருள் மனிதனிடம் குறைபாடுகள் தோன்றும் போது அதனை சரியாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளான் என்பதும் ஆகும்.

நோய் ஏற்பட்டால் அதற்கு சிகிச்சை இருக்கிறது. சிகிச்சை செய்யும் முறையையும் இறைவனே கற்றுத் தந்துள்ளான். மூளை வளர்ச்சியும் தகுதியும் பெற்றுவிட்டதாக பெற்றோர் தமது குழந்தையைக் குறித்து கருதினாலும் உண்மை இதுதான். இவற்றுக்கு பின்னால் முழுக்க முழுக்க இறை வல்லமைதான் தனது தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. பிறகு இவை அனைத்தும் இறைவனது ருபுபிய்யத்தின் பக்கம் கவனமூட்டுகிறது. மனிதனுக்கு அல்லாஹ் ஒரு அறிவுத்திறன் வழங்கியுள்ளான். தனது வசதிக்காக, தேவைக்காக புதிய புதிய வி-யங்களை கண்டுபிடித்து உருவாக்கிக் கொண்டே செல்ல முடியும். உதாரணமாக நோய்களுக்கான சிகிச்சைமுறை புதிய புதிய சிகிச்சை முறைகள் உருவாகிக் கொண்டே செல்கின்றன. பல நோய்கள் முன்னாள்களில் இருந்ததில்லை.

அவற்றை பற்றி அறிய முடிந்ததில்லை. அத்தகைய வசதி இருந்ததில்லை. அல்லாஹ் மனிதனுக்கு அதற்கான தகுதியை வழங்கினான். பரிணாம வளர்ச்சியால் பவுதிகமாகவும், மனவளர்ச்சி மூலமாக பல ஆற்றல்களை வழங்கினான். மேலும் புதிய கருத்துக்கள் அவனது சிந்தனையில் உதயமாகின்றன. அதனை பயன்படுத்தி இன்னும் அதிகமாக உருவாக்க முடிகிறது.

உதாரணமாக மனித இதயம். முற்காலத்து மக்கள் கடுமையான உழைப்பு, பணிகளால் அல்லது இதயத்துக்கு கேடு விளைவிக்காத உணவுகளை உட்கொண்டதால் இதய நோயை அறிந்திருக்கவில்லை. அவர்களின் வாழ்வும் மிகவும் கடுமையானதாக இருந்தது. ஆனால் மனிதனின் வசதிகள் கூடக்கூட நோய்களும் அதிகரித்தது. அவற்றுள் ஒன்று இதயநோய். இதனை அறுவை சிகிச்சை செய்து சரியாக்கும் வழியையும் இறைவன் மனிதனுக்கு கற்றுத்தந்தான். பிறகு இதில் வளர்ச்சி ஏற்பட்டது. பிறகு இன்னொரு வகை சிகிச்சை ஆஞ்சியோ பிளாஸ்டிக் சர்ஜரி என்ற எளிய முறை. இப்போது இன்னும் அதிகமாக ஸ்டெம்செல் மூலம் சிகிச்சைக்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அல்லாஹ் மனிததகுதியை இவ்வாறு அதிகப்படுத்திக் கொண்டே செல்கிறான். அவனது தேவைக்கேற்ப இது நடக்கிறது. இது அல்லாஹ்வுடைய ருபூபிய்யத் ஆகும். அந்த மேலான இறைவனை புகழ்வது அவனது அடியார்கள் மீது கடமையாகும். அவன் ஒரு குறைபாட்டை வெளிப்படுத்தும் போது அதன் தீர்வு அல்லது நிவாரணத்தையும் புரிய வைத்து விடுகிறான். ஒரு தவ்ஹீதை உடையவர் எப்போது ஒரு புதிய கண்டுபிடிப்பை பார்த்தாலும் அது ஓர் இறையருள் என்று உணர்கிறார். பவுதீக நோய்களுக்கு இவ்வாறு நிவாரணத்திற்கு வழி செய்கிற இறைவன் ஆன்மீக நோய்களுக்கான சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்கிறான். ஏன் செய்யமாட்டான்?

ஒவ்வொரு காலத்திலும் ஆன்மீக நோய்களுக்கான சிகிச்சையுடன் நபிமார்கள் வந்த போது அந்தந்தக் காலத்து ஆன்மீக நோய்களுக்கு சிகிச்சையளித்தார்கள்.

மனிதவாழ்வு ஆன்மீக நோய்களின் ஒட்டுமொத்த தொடுப்பாகி, புதிய புதிய நோய்கள் உருவாகத் தொடங்கிய போது, எல்லா காலத்து நோய்களும் ஒன்று கூடிய போது ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களை உருவாக்கினான். திருக்குர்ஆனில் முழுமையான போதனையை இறக்கினான். அவர் அதனைக் கொண்டு சிகிச்சை செய்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) மிக உயரிய முன்மாதிரி காட்டி ஒளியை ஊட்டி விலங்குகளை இறைமனிதர்களாக மாற்றினார்கள். ஆனால் ஒரு காலத்துக்கு பிறகு முஸ்லிம்களும் கூட அந்த போதனையின் படி அமல் செய்ய மறந்தனர். அந்நிலையில் தனது வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அவர்கள் திருக்குர்ஆனின் போதனைகளில் இருந்து அறிவு மற்றும் ஞானம் என்ற முத்துக்களை வெளிப்படுத்தி அந்த நோய்களுக்கு சிகிச்சை அளித்தார்கள்.

இந்த உம்மத்தில் தோன்றி உள்ள நோய்களுக்கு சிகிச்சையை பெறுவதற்கு என்னோடு நீங்கள் இணைய வேண்டும். அப்போது தான் வெற்றி பெறுவீர்கள் என்று விளக்கினார்கள்.

ஒரு நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பிறகு தான் டாக்டர்களுக்கு நோயுக்குரிய சிகிச்சை புரிய வருகிறது. ஆனால் ஆன்மீக சிகிச்சைக்காக திருக்குர்ஆனில் 1400 ஆண்டுகளுக்கு முன்பே சிகிச்சைகளை வைத்துவிட்டான். எல்லாகாலத்திலும் தனது தூய அடியார்களுக்கு அதனை புரியவும் வைத்தான். இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) புதிதாக தோன்றியிருந்த எல்லா நோய்களுக்கும் சிகிச்சையை தெரிவித்தார்கள். ஏனெனில் திருக்குர்ஆனை புரியும் திறனை இக்காலத்துக்கு ஏற்ப ஞானத்தை விளக்கும் தகுதியை அல்லாஹ் அவர்களுக்கே வழங்கினான். எல்லாவகையான நாஸிக் மன்சூக் (மாற்றிய வசனம், மாற்றப்பட்ட வசனம்) களில் இருந்து அன்னார் திருக்குர்ஆனை தூய்மையாக்கினார்கள். பிறகுதான் சரியான சிகிச்சை தெரிய வந்தது. இந்த வேலையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்தார்கள்.

மேலும் உண்மையான முஃமின்கள், குர்ஆன் மீது ஆய்வு செய்பவர்களுக்கு இந்த சிகிச்சை தொடர்ந்து கிடைத்து வந்தது. அன்னாரின் போதனைகளின் ஒளியில் அது சாத்தியமாக இருந்தது. இவை அனைத்தையும் அன்னார் திருக்குர்ஆனிலிருந்து எடுத்து நம்முன் வைத்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வருவதற்கோ அல்லது எந்த சீர்திருத்தவாதியும் வருவதற்கான தேவை இல்லை என்று மக்கள் நினைக்கின்றனர். அவர்களின் இந்த நோய்கள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனால் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மக்கள் ஏற்கத் தயாராக இல்லை. எதிர்ப்பு அதிகமாகிறது; வன்முறை அதிகரிக்கின்றது என்றால் இது இஸ்லாமிய போதனையா?

இறைவனின் பெயரால், மார்க்கத்தின் பெயரால் அநீதியிழைப்பது இஸ்லாமிய போதனையா? ஒருபோதும் அன்று. இவர்கள்தான் உணரவில்லை; தடுமாறி உள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்து வைத்த உண்மையான போதனையை ஏற்க மறுத்து விட்டனர். இவையனைத்தும் முஸ்லிம்களிடம் காணப்படுகின்ற நடைமுறைகளாகும். இவை அனைத்தும் தமது தற்காலிக ரப்புகளை திருப்திப்படுத்துவதற்காக செய்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரே இறைவனின் பக்கம் அழைக்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறக்கிய உண்மையான போதனையின் பக்கம் அழைக்கின்றனர்.

சில அரசாங்கங்களின் தரப்பிலிருந்து மிக சிரமத்திற்கு உள்ளானதால் ஒரு அறிவிப்பு கூட செய்யப்படுகிறது. ஒரு சீர்திருத்தவாதி தேவை. முஸ்லிம்களுக்கு கிலாஃபத் வேண்டும் என்கின்றனர். மறுபுறம் அல்லாஹ் இந்த நோய்களுக்கு சிகிச்சை அளிப்பவரை அனுப்பினால் அவரை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

பிறகு இறைவன் கூறுகின்றான்: அவன் (அவனுடைய ஆற்றல்களைக்) கணித்து, (அவற்றிற்கேற்ப அவனுக்கு) நேர்வழி காட்டுகின்றான். (87:4)

இந்த வசனமும் முதல் வசனத்துடன் தொடர்புடையதாகும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**கத்தர** என்ற சொல்லுக்கு இரு பொருள்கள் உள்ளன. முதல் வசனத்தில் இறைவன் மனிதனிடம் வளர்ச்சி பெறுவதற்கான ஆற்றல் வழங்கப்பட்டுள்ளதாக கூறியிருப்பதால் மனிதன் அவனது ஆற்றலை மதிப்பிட்டு அதனை வளர்த்துக் கொள்வதற்கான சாதனங்களை ஏற்பாடு செய்தான்.

முதலில் மனிதனைப் படைத்தான். அதுவும் அவனது போதனையின்படி நடக்கக்கூடிய முறையில் படைத்தான். பிறகு போதனையையும் இறக்கினான். மனிதனின் அறிவாற்றல் வளர வள அதற்கேற்ப வழிகாட்டும் ஏற்பாட்டை செய்தான். இன்னொரு பொருள், மனிதனது தேவைக்கேற்ப போதனைகளை அனுப்பினான். இவை அனைத்தையும் முழுமையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இறக்கினான். அதன் மூலம் மனிதன் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமை குறித்தும் தெரிந்து கொள்ள வேண்டும். தனது பொறுப்புகளையும் உணர வேண்டும். அடியார்களின் உரிமைகளையும் செய்ய வேண்டும். ஆகவே இறைவனிடமிருந்து வழிகாட்டல் வரும் போது ஒரு மூஃமின் அதன்படியே நடக்க வேண்டும். புரியவில்லை எனில் இமாம், சிகிச்சை அளிப்பவர் என்று அல்லாஹ் யாரை அனுப்புகிறானோ அவர் பக்கம் திரும்ப வேண்டும். இதில்தான் உலகின் நிலைப்புத்தன்மை உள்ளது. இதனைப் பற்றி முதல் வசனத்திலும் அல்லாஹ் கூறியுள்ளான். அல்லாஹ்வின் தஸ்பீஹ் மற்றும் இபாதத்துகளை செய்ய வேண்டும். அவனால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். புரியவில்லை எனில் களங்கமற்ற முறையில் அல்லாஹ்விடம் உதவி கேட்டால் சரியான வழிகாட்டல் வழங்குவான். அப்போது நாம் அதற்குரிய கடமையை நிறைவேற்ற முடியும்.

அடுத்து இந்த தஸ்பீஹ் உடன் அல்லாஹ்வுடைய தூதுச் செய்தியை உலகிற்கு சென்று சேர்க்க வேண்டும். இதுவே எல்லா பலவீனங்களிலிருந்து விலகிய ஒரு முஃமினின் அடையாளமாகும். அல்லாஹ் நமக்கு வாய்ப்பு தருவானாக. நாம் அவனால் அனுப்பப்பட்டவருடன் இணைந்து அவனது போதனையின்படி

நடப்போமாக. சரியான முறையில் தஸ்பீஹ் செய்பவராகவும், அவனுக்கு இபாதத் செய்பவராகவும், அவனது தூதுச் செய்தியை எட்ட வைப்பவராகவும் ஆவோமாக.

மிஸ்ர் (எகிப்து) அஹ்மதிகளுக்காக குறிப்பாக நான் துஆ செய்யுமாறு கூற விரும்புகிறேன். அங்கு கடந்த சில நாட்களாக ஜமாஅத்திற்கு எதிரான கூச்சல் கிளம்பியுள்ளது. நமது 12-13 அஹ்மதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியவில்லை. எனவே அவர்களுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். அவர்கள் விடுதலை ஆக வேண்டும். கைது செய்து அவர்களது ஈமானை பிடுங்கி விடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். அல்லாஹ்வின் அருளால் எந்த பகுதியில் வாழும் அஹ்மதியாக இருந்தாலும் தமது ஈமான் விஷயத்தில் உறுதியானவர்கள் ஆவர். எனவே இவர்களும் தமது உறுதியான ஈமானை காட்டி வருகின்றனர்; வருவார்கள் - இன்ஷா அல்லாஹ். நமது ஈமானில் இன்ஷா அல்லாஹ் எந்த மாசும் ஏற்படாது.

கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு பெண்ணையும் கைது செய்து, பிறகு விட்டு விட்டார்கள்.

பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் மிக சிரமமான நிலைதான் உள்ளது.

அல்லாஹ் உலகிற்கு முஹம்மதிய மஸீஹின் தூதை கேட்கவும், புரியவும், ஏற்கவும் வாய்ப்பினை வழங்குவானாக. அதன் மூலம் எல்லா விதமான கறைகளும் உலகை விட்டு அகலட்டுமாக. இறைவன் அதற்கான ஏற்பாட்டை செய்திருக்கும் போது நான் ஏற்கனவே கூறியது போன்று அதிலிருந்து பயன் பெறுவது அடியார்களின் பணியாகும். பயனடையவில்லையெனில் அதனை எப்படி சரி செய்வான். அல்லது வேறு என்ன செய்வான் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். அல்லாஹ் ஒவ்வொருவரையும் எல்லா ஆபத்துகள், தொல்லைகளிலிருந்தும் பாதுகாப்பானாக. தன்புறம் குனியும் களங்கமற்ற அடியார்களாக ஆக்குவானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 14.05.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET,
MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**